# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 130/மா/2019
ஆணை நாள்: 05.2.2020

திரு. I.H. சேகர்,
ஈஞ்சம்பாக்கம்,
சென்னை – 600 115. — **முறையீட்டு மனுதாரர்**

மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள்,
மண்டலம் – 15,
பெருநகர சென்னை மாநகராட்சி. — **எதிர் மனுதாரர்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஈஞ்சம்பாக்கம், டாக்டர் நஞ்சுண்டராவ் சாலை, எண்.20 என்ற முகவரியில் வசிக்கும், திரு. I.H. சேகர் என்பவரது 23.08.2019 நாளிட்ட முறையீட்டு மனு 26.8.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.130/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் 23.08.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, ஈஞ்சம்பாக்கம், கௌளியம்மன் கோவில் தெருவில் திருமதி. சித்ரா என்பவர் உரிய கட்டிட அனுமதியின்றி நான்கு மாடி கட்டிடம் கட்டி வருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி, 15–வது மண்டல அலுவலருக்கு கடிதம் வாயலாக தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், திருமதி. சித்ரா என்பவர் தொடர்ந்து கழிவுநீரை தெருவில் விட்டு பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவித்து வருவதாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடவும் கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, 15–வது மண்டல அலுவலர் 09.10.2019 நாளிட்ட அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் குறிப்பிடும், சென்னை, ஈஞ்சம்பாக்கம் கௌரியம்மன் கோவில் தெருவில் திருமதி. சித்ரா என்பவரால் கட்டப்படும் கட்டிடம், 196–வது கோட்ட இளநிலை பொறியாளரால் 9.7.2019 அன்று களஆய்வு மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு நகரமைப்பு சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 85-ன்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்ட வரைபடம் சமர்ப்பிக்க தெரிவித்தும் மற்றும் வேலை நிறுத்த தாக்கீதும் வழங்கப்பட்டது என்றும், சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் கட்டிட வரைபட அனுமதி நகல் ஏதும் சமர்ப்பிக்காததால், கட்டிடத்தை பூட்டி சீல் வைக்கவும், கட்டிடத்தை இடிக்கவும் 02.8.2019 அன்று தாக்கீது வழங்கப்பட்டு 30 நாட்களுக்குள் விளக்கமளிக்க அறிவுறுத்தப்பட்டது என்றும், இவ்விதி மீறல் கட்டடத்தின் மீது தமிழ்நாடு நகரமைப்பு சட்டம் 1971 ன்படி மேல் நடவடிக்கை வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடம் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 15–வது மண்டல அலுவலர் சார்பாக இளநிலை பொறியாளர் 09.10.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் 09.7.2019 அன்று தன்னால் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும் கட்டிட உரிமையாளரிடம் கட்டிட அனுமதி வரைபடம் சமர்ப்பிக்க தெரிவித்து தாக்கீது கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டது என்றும், கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதி வரைபடம் ஏதும் சமர்ப்பிக்கததால் கட்டிடத்தைப் பூட்டி சீல் வைக்கவும், கட்டிடத்தை இடிக்கவும் 02.8.2019 அன்று தாக்கீது வழங்கப்பட்டு, 30 தினங்களுக்குள் தனது விளக்கத்தினை சமர்ப்பிக்க கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது என்றும், ஆனால் கட்டிட உரிமையாளரிடமிருந்து எந்தவித விளக்கமும் பெறப்படவில்லை என்றும், இக்கட்டிடத்தின் 2வது மாடிக்கு 10.10.2019 நாளன்று வீட்டை காலி செய்ய வழங்கும் தாக்கீது (De-occupation Notice) வழங்கி, வீட்டை காலி செய்ய 30 நாட்கள் அவகாசம் அளித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரர் 04.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை ஈஞ்சம்பாக்கம், கௌரியம்மன் கோவில் தெரு, கதவு எண். 5/19-ல் திருமதி. சித்ரா என்பவர் தனது வீட்டிற்கு அருகில் அங்கீகாரம் ஏதும் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக மூன்று அடுக்குமாடி கட்டிடம் கட்டியுள்ளார் என்றும், இது சம்மந்தமாக மாநகராட்சிக்கு பலமுறை மனு கொடுத்துள்ளதாகவும், மாநகராட்சி அலுவலர்கள் கட்டிடம் கட்டுவதை நிறுத்துமாறு அறிவிப்பு கொடுத்தார்கள் என்றும், அந்த அறிவிப்புகளை எல்லாம் பொருட்படுத்தாமல் கட்டிடம் கட்டிக் கொண்டும், 12 அடி பாதையில் யாரும் போக முடியாத அளவிற்கு கழிவுநீரை திறந்து

விடுகிறார்கள் என்றும் வாகனங்களை நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறு செய்து வருகிறார் என்றும், இன்னுமொரு மூன்று மாடி கட்டிடம் இப்பகுதியில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்றும், சிலர் கடற்கரையில் ஒட்டி வீடு கட்டியுள்ளார்கள் என்றும், கடற்கரையில் எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் இல்லாமல் இயற்கையை பாதுகாக்க வேண்டுமென்றும், திருமதி. சித்ராவை போன்று சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டியுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், தான் இதுபோன்று அடிக்கடி மனு செய்வதால் தன்னை இரண்டு முறை கடத்தி சென்றுவிட்டார்கள் என்றும் காவல்துறை மற்றும் உறவினர்கள் தன்னை மீட்டு வந்தார்கள் என்றும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அப்பகுதியை காப்பாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, 15வது மண்டல அலுவலர் 17.10.2019 நாளிட்ட அறிக்கையில் திருமதி. சித்ரா என்பவருக்கு உரிமையான கட்டிடம் ஈஞ்சம்பாக்கம் கிழக்குக் கடற்கரை சாலையிலிருந்து கிழக்கில் பிரியும் நஞ்சுண்டராவ் சாலையில் வடக்கே அமைந்துள்ள கௌரியம்மன் கோவில் முதல் தெருவில் வங்காள விரிகுடா கடல் அலையிலிருந்து 110 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றும், இக்கட்டிடம் தரைத்தளம் மற்றும் முதல்தளம் முறையே 129.72. ச.மீ மற்றும் 129.72 ச.மீ அளவீட்டில் முழு பரப்பிலும் முந்தைய பேரூராட்சி காலத்திலேயே 2011 ஆம் ஆண்டிற்கு முன்னதாக கட்டி முடிக்கப்பட்டது என்று அறியப்பட்டது என்றும், மேலும் இக்கட்டிடத்தின் இரண்டாவது தளம் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதவாக்கில் தொடங்கப்பட்டு 73.10 ச.மீ அளவீட்டில் தற்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வறிக்கையில் இக்கட்டிடத்தின் மீது வேலை நிறுத்த தாக்கீது மற்றும் பூட்டி சீல்வைக்க மற்றும் உடைக்க வழங்கும் தாக்கீது வழங்கியும் கட்டிடப்பணி தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது என்றும், இக்கட்டிடத்தில் குடியிருப்போர்களை காலி செய்ய வழங்கும் தாக்கீது 10.10.2019 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும், இதனைத் தொடர்ந்து இக்கட்டிடத்தை பூட்டி சீல் வைக்க 11.11.2019க்குள் ஆணையரின் அனுமதி பெற வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அதன் தொடர்ச்சியாக அக்கட்டிடத்தின் மீது இறுதி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, கட்டிட உரிமையாளர் திருமதி. சித்ரா என்பவருக்கு 3.1.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 23.12.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. ஆனால் திருமதி. சித்ரா 3.1.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாக்குமூலங்கள் ஆகியவைகள் கவனமுடன்

பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள அனுமதியற்ற மற்றும் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக மாநகராட்சி நிர்வாகத்திற்கு புகார் அளித்தும் மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், மாநகராட்சி அதிகாரிகள் விதிகளை செயல்படுத்தும் அதிகாரிகளாக செயல்படாமல் பார்வையாளர்களாகவே செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், உரிய நேரத்தில் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்காமலும் விதிமீறி, அனுமதியின்றி கட்டிடம் கட்டுபவருக்கு துணை போய் இருப்பதும் புலனாகிறது. இந்நிகழ்வில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், உரிய அனுமதியின்றியும் விதி மீறியும் கட்டப்பட்டுள்ள இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டவிதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் இம்மாதரியான விதிமீறல் கட்டிடங்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், கடற்கரையின் இயற்கை சூழல் மாறாவண்ணம் விதிகளுக்கு உட்பட்டு பாதுகாக்க கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரங்களை அறிக்கையாக சமர்ப்பிக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்.

பெறுநர்

(1) திரு. I.H. சேகர்,
எண். 20, டாக்டர் நஞ்சுண்ட ராவ் சாலை,
ஈஞ்சம்பாக்கம், சென்னை – 600 115.

(2) மண்டல அலுவலர்,
மண்டலம் -15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 20, ராஜீவ்காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை -600 119.

(3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்